00173

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
சட்டக் கற்றைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் 2023 /2024
மட்டம் 4 தொடர் மதிப்பீட்டு பரீட்சை 1
பகிரங்க சர்வதேச் சட்டம் -LLU 5712
காலம் - ஒரு (01) மணித்தியாலம்

திகதி : 07.11.2024 நேரம் : பி.ப. 03.30 - பி.ப. 04.30

தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.
தரப்பட்டுள்ள சம்பவத்திற்கு இணங்க சகல வினாக்களிற்கும் விடையளிக்குக.

அக்னி மற்றும் வருண என்பன உலகின் தென்பகுதியை சார்த்த அயல் நாடுகள் ஆகும் என்பதுடன், இவை ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகளும் ஆகும். கடந்த வருடம், அக்னி நாட்டில் நாட்டில் ஒரு இராணுவ பதற்ற நிலை உருவாகியது. ஆயினும் இது வெற்றியடையவில்லை. ‘மக்களின் புரட்சி ஒன்றிணைவு என்பதன் தலைவர் ஆன விக்டர் என்பவர் இவ் இராணுவ பதற்ற நிலையை ஏற்பாடு செய்தமைக்காக குற்றம் சாட்டப்பட்டார். மூன்று மாதங்களுக்கு முன்னர், சட்ட நடபடி முறைகளை எடுத்துக்காட்டி, விக்டர் வருண நாட்டிடம் அரசியல் புகலிடம் தேடினான். அக்னி நாட்டில் அமைந்துள்ள வருண நாட்டின் தூதரகம் ஆனது விக்டரிற்கு புகலிட தஞ்சம் வழங்கியது. இப்போது, அக்னி ஆனது, வருண நாடு வழங்கியுள்ள புகலிட தஞ்சத்தின் சட்ட வலிதாந்தன்மையை கேள்விக்கு உட்படுத்துகிறது. முரணாக, வருண நாடானது உலகின் தென்பகுதி நாடுகளில் தொன்று தொட்ட காலம் முதல் அரசியலால் பாதிப்புற்றவர்களை பாதுகாப்பதற்கு, புகலிட தஞ்சம் வழங்கும் தொடர்ச்சியான வழக்கம் ஒன்று இருக்கிறது என வாதிடுகிறது. விக்டர் குற்றம் சாட்டப்பட்டுள்ள குற்றத்தை புரிந்துள்ளமைக்கு எவ்வித சான்றும் இன்மையாலும், இது தொடர்பில் அக்னிக்கும் வருணவிற்கும் இடையில் எவ்வித உடன்படிக்கையும் காணப்படாததாலும், தனது முந்தைய வழக்கங்களின் பிரகாரம் விக்டரிற்கு புகலிட தஞ்சம் வழங்குவதை தொடருவதற்கு வருண நாடு விரும்புகிறது. மேலும், வருண நாடானது கடந்த காலத்தில் பிற நாடுகளின் அரசியலால் பாதிப்புற்றவர்களிற்கு அக்னி நாடும் புகலிட தஞ்சம் வழங்கியுள்ள சந்தர்ப்பங்கள் உள்ளதாக சுட்டிக்காட்டுகிறது. இரு நாடுகளும் இதனை சர்வதேச நீதிமன்றத்தில் தீர்ப்பதற்கு விரும்புகின்றனர்.

குறிப்பு: சர்வதேச சட்டத்தில் புகலிட தஞ்சம் என்பதற்கான பொது வரைவிலக்கணம் ஆனது வெளிநாட்டுப் பிரஜை ஒருவருக்கு அவளது / அவனது சொந்த நாட்டிற்கு எதிராக வழங்கப்படும் பாதுகாப்பு ஆகும்.

(அ) சர்வதேச நீதிமன்றத்திற்கான பொருத்தணையின் உறுப்புரை 38 இன் கீழ் எவ்வாறு அக்னி மற்று வருண முதலான நாடுகள் இரண்டும் தமது பிணக்கை தீர்க்கலாம்? பொருத்தமான சட்ட எடுத்துக்காட்டுகளுடன் ஆராய்க. (15 புள்ளிகள்)

(ஆ)அக்னி நாடு ஆனது உலகின் தென் பகுதியில் அரசியலில் பாதிப்புற்றவர்களுக்கு புகலிட தஞ்சம் வழங்குவதை தொடர்ச்சியாக எதிர்பார்த்திருக்கும் எனின், இதன் விளைவு எவ்வாறு இருக்கும்? (05 புள்ளிகள்)

**(15+05 = 20 புள்ளிகள்)**

*** பதிப்புரிமைபெற்றது ***